# அரசகரும மொழித் தேர்ச்சி வாய்மூலப் பரீட்சை

<u>18/2020 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடாத்தப்படுகின்ற மொழிப் பயிற்சி கற்கைநெறிகளுக்கான பாடத்திட்டத்திற்கமைய வாய்மூலப் பரீட்சை முறை</u>

## வகுதி 02 - 150 மணித்தியாலங்கள்

## 02 ஆம் வகுதிக்குரிய 150 மணித்தியால மொழிப் பயிற்சி கற்கைநெறிகளை பின்பற்ற வேண்டிய இரண்டாம்நிலை மட்ட உத்தியோகத்தர்களுக்காக நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள வாய்மூலப் பரீட்சை மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள்

குறிக்கோள்:

அரசகரும மொழிக் கொள்கையை வினைத்திறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு சிங்களம் மற்றும் தமிழ் மொழி பேசும் இனங்களுக்கு மத்தியில் சமூக, கலாசார வேறுபாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தலும், அவற்றிற்கு மதிப்பளித்தலை விருத்தி செய்தலும்.

நோக்கங்கள்:

- மோழியினை செவிமடுத்தல், பேச்சு மற்றும் வாசிப்பு ஆகிய மூன்று பிரிவுகளிலும் வெற்றிகரமாக தொடர்பாடலை மேற்கொள்ளும் ஆற்றலை அடைதல்.

- தமது தொழிலுடன் சம்பந்தப்பட்ட அன்றாட பணிகளில் ஈடுபடுவதற்குத் தேவையான மொழி ஆற்றலை அடைதல்.

- வினைத்திறன்மிக்கவாறு மொழியைப் பயன்படுத்தி சிறந்த மக்கள் தொடர்பை கட்டியெழுப்பும் ஆற்றலை அடைதல்.

- பல்வேறுபட்ட நபர்கள் அவர்கள் பேசும் மொழியில் (சிங்களம், தமிழ்) முன்வைக்கும் விடயங்களை, இலக்கு மொழிக்கு (சிங்களம், தமிழ்) மொழிபெயர்த்து புரிந்துகொள்ளும் ஆற்றலை அடைதல்.

**உள்ளடக்கம்:**

**(01) செவிமடுத்தல் திறன்:**

- ❖ தமது தொழிலுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களுடனும் சம்பவங்களுடனும் தொடர்புபட்ட உரையாடல்களை செவிமடுத்து அவற்றைப் புரிந்துகொள்ளல்.
- ❖ தமது தொழிலுடன் தொடர்புடைய பரந்துபட்ட சூழலில் காணப்படுகின்ற அறிவித்தல்கள், கட்டளைகள், நேரலை ஒலிபரப்புகள் போன்றனவற்றிற்கு செவிமடுத்து அவற்றை புரிந்துகொள்ளல்.
- ❖ தமது தொழிலுடன் தொடர்புடைய இலத்திரனியல் ஊடகங்களை செவிமடுத்து அவற்றைப் புரிந்துகொள்ளல்.
- ❖ தமது தொழிலுடன் தொடர்புடைய கூட்டங்கள், அமர்வுகள் மற்றும் விரிவுரைகளை/ உரைகளை செவிமடுத்து அவற்றைப் புரிந்துகொள்ளல்.

**(02) பேச்சுத் திறன்:**

- ❖ சம்பவங்களையும் சந்தர்ப்பங்களையும், சரியான உச்சரிப்புடன் துல்லியமாக விபரித்தல்
- ❖ தமது கருத்துக்கள், உடன்பாடுகள் மற்றும் மாற்றுக்கருத்துக்களை பொருத்தமானவாறு முன்வைத்தல்
- ❖ பல்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைமைகளின் போது, வினைத்திறன்மிக்க வகையில் கலந்துரையாடல்களில் ஈடுபடுதல்.
- ❖ வரவேற்புரை, நன்றியுரை போன்ற சிற்றுரைகளை நிகழ்த்துதல்
- ❖ பொது சந்திப்புகளின் போது, தமது கருத்துக்களை தெரிவித்தலும், மற்றவர்களின் கருத்துக்களுக்கு பதிலளித்தலும்.

**(03) வாசிப்புத் திறன்:**

- ❖ தொழில் ரீதியாக தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் சரியான உச்சரிப்புடன் சப்தமிட்டு வாசித்தல்
- ❖ உத்தியோகபூர்வ கடிதங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஆவணங்களை வாசித்து புரிந்துகொள்ளல்
- ❖ செய்தித்தாள்களில் வெளிவரும் கட்டுரைகளை வாசித்து புரிந்துகொள்ளல்

## பரீட்சை நடைமுறை

| | ஆக்கக்கூறு | காலம் | வினாத்தாள் அமைப்பு | புள்ளிகள் | சித்தியெய்துவதற்குப் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 01. | செவிமடுத்தல் | 01 மணித்தியாலம் | 4 பகுதிகள். 40 வினாக்கள் | 100 புள்ளிகள் | 40 புள்ளிகள் |
| 02. | பேச்சு மற்றும் வாசிப்பு | 15 நிமிடங்கள் | 4 பகுதிகள் | 100 புள்ளிகள் | 40 புள்ளிகள் |

## 01. செவிமடுத்தல் திறன் பரீட்சை

பரீட்சார்த்திகளின் சிங்கள மொழியில் / தமிழ் மொழியில் செவிமடுத்தல் திறனைப் பரீட்சிப்பதற்காக இப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. அன்றாட சமூக வாழ்வில் அல்லது கடமையின் போது, தமது மற்றைய அரசகரும மொழியில் இடம்பெறும் உரையாடலொன்றை அல்லது கருத்துத் தெரிவிப்பொன்றை அல்லது கலந்துரையாடலொன்றை அல்லது விரிவுரையொன்றை / உரையொன்றை செவிமடுத்து, அதை கிரகித்து, அதனூடாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தலும், கடமையின் போது தமது மற்றைய அரசகரும மொழியில் தேவைப்படுகின்ற / சொற்களை செவிமடுத்து, அவற்றை கிரகித்து, அதனூடாக கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பரீட்சையின் போது செவிமடுப்பதற்குத் தரப்படுகின்ற அவ்வாறான பல்வேறு வகையான ஒலிநாடாக்களை நன்கு செவிமடுத்து, விளங்கி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

02 ஆம் வகுதிக்குரிய உத்தியோகத்தர்களின் பதவி மற்றும் பணிகளின் தன்மைக்கு ஏற்ப பரீட்சைக்குரிய விடயப்பரப்புகளும் தலைப்புகளும் தயார் செய்யப்படும்.

## வினாப்பத்திர உள்ளடக்கம் / மாதிரி

வினாத்தாள் 04 பகுதிகளை கொண்டது. அந் 4 பகுதிகளும் 40 வினாக்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

- **பகுதி 1 (10 வினாக்கள்)**

கடமைகளை நிறைவேற்றும் போது அன்றாடம் தேவைப்படுகின்ற சொற்களை செவிமடுத்து, அதனூடாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல்.

உதாரணம் : பதவிப் பெயர்கள் (ஆணையாளர் / பணிப்பாளர்)
வாழ்த்துத் தெரிவித்தல்
கட்டளைகள்
கடமையின் போது பயன்படுத்தும் ஆவணங்களின் பெயர்கள்
(லீவு விண்ணப்பப் படிவம்/வரவுப் பதிவேடு)

(இவ்வாறான சொற்களை உள்ளடக்கிய ஒலிநாடாவை செவிமடுத்து, அச்சொற்களை எழுதுதல், உரிய சொற்களை செவிமடுத்து சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுதல், ஒரு மொழியில் கூறப்படுகின்ற சொல்லை மற்றைய மொழியில் காணப்படுகின்ற விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுதல், சொற்களை செவிமடுத்து அவை ஒலிபரப்பாகும் ஒழுங்கு வரிசைக்கேற்ப இலக்கமிடுதல், சொற்களை செவிமடுத்து அவை சரியாயின் √ எனவும் பிழையாயின் x எனவும் அடையாளமிடுதல், போன்ற முறைகளில் வினாக்கள் தயாரிக்கப்படலாம்).

❖ **பகுதி 2 (10 வினாக்கள்)**

உரிய மொழியில் கொடுக்கப்படும் திகதிகள், நேரங்கள், எண்ணிக்கைகளை/ இலக்கங்களை செவிமடுத்து, அதனூடாக கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல்

உதாரணம்: மு.ப. 09.00
157

(திகதிகள், நேரங்கள், எண்ணிக்கை/ இலக்கங்களை உள்ளடக்கிய ஒலிநாடாவை செவிமடுத்து சொற்களில் எழுதுதல், இலக்கங்களில் எழுதுதல், சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுதல் போன்ற முறைகளில் வினாக்கள் தயாரிக்கப்படலாம்.)

❖ **பகுதி 3 (10 வினாக்கள்)**

இலகுவான குறுகிய வாக்கியங்களை செவிமடுத்து, அவற்றின் மொழிபெயர்ப்பு சரியானதா எனப் பரீட்சித்தல்

உதாரணம்: ஆணையாளர் அவர்கள் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

(இவ்வாறான வாக்கியங்களை உள்ளடக்கிய ஒலிநாடாவை செவிமடுத்து, தவறாக மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட பகுதியை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுதல், செவிமடுத்த மொழிபெயர்ப்பு சரியாயின் √ எனவும் பிழையாயின் x எனவும் அடையாளமிடுதல் போன்ற முறைகளில் வினாக்கள் தயாரிக்கப்படலாம்).

- ❖ **பகுதி 4 (10 வினாக்கள்)**

இருவருக்கிடையில் அல்லது மூவருக்கிடையில் இடம்பெறும் கலந்துரையாடலொன்றை மையமாகக் கொண்டு வினாக்களைக் கேட்டல் அல்லது ஏதேனும் விடயப்பரப்பு/ துறை சம்பந்தமாக ஆசிரியரொருவரினால், விரிவுரையாளரொருவரினால், நிறுவனத் தலைவரொருவரினால் ஆற்றப்படும் உரையை/ பேச்சை மையமாகக் கொண்டு வினாக்களைக் கேட்டல்.

உதாரணம் : நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்தல் தொடர்பான கலந்துரையாடல்.
பிரதேச செயலாளரொருவர் ஆற்றும் உரை.
சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியொன்றில் ஆற்றும் உரை/ சொற்பொழிவு.

(கலந்துரையாடல் அல்லது விரிவுரையொன்றை/ உரையொன்றை உள்ளடக்கிய ஒலிநாடாவை செவிமடுத்து இடைவெளிகளை நிரப்புதல், சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுதல், கொடுக்கப்பட்ட கூற்று சரியாயின் √ எனவும், பிழையாயின் x எனவும் அடையாளமிடுதல், தவறான பகுதியை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுதல், தரப்பட்ட கூற்றுக்களை ஒலிநாடாவின் ஒழுங்கு வரிசைக்கேற்ப ஒழுங்கமைத்தல் போன்ற முறைகளில் வினாக்கள் தயாரிக்கப்படலாம்).

## பரீட்சைக் காலம் மற்றும் ஒலிநாடாவை இயக்குதல்/ ஒலிக்கச் செய்தல்

- காலம் 01 மணித்தியாலம். (மொத்த பரீட்சைக் காலம்)
- இங்கு ஒரு பகுதிக்கு 03 நிமிடங்களுக்கும் – 06 நிமிடங்களுக்கும் இடைப்பட்ட ஒலிநாடா என்றவாறு, 04 பகுதிகளுக்கும் 04 ஒலிநாடாக்களுக்கு செவிமடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். (ஒவ்வொரு பகுதியின் தன்மைக்கேற்றவாறு காலம் / நேரம் வேறுபடும்.)
- செவிமடுத்தலின் போது, ஒரு பகுதிக்குரிய ஒலிநாடாவை இரண்டு முறையும், ஒரு வாக்கியத்தை/ ஒரு சொல்லை இரண்டு முறையும் செவிமடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.
- ஒலிநாடாவொன்றை ஒலிக்கச் செய்ய முன், வினாத்தாளில் உரிய பகுதியை வாசிப்பதற்கு 03 நிமிடங்கள் வழங்கப்படும்.
- ஒலிநாடாவொன்று ஒலிபரப்பாகி முடிந்த பின், விடைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு 03 நிமிடங்கள் வழங்கப்படும்.
- மேலதிகமாக காலம் எஞ்சியிருப்பின் அக்காலம், வினாத்தாள்களை வழங்குவதற்கு முன் அறிவுறுத்தல்களை வழங்குதல், அனுமதி அட்டையில் கையொப்பமிடுதல், பரீட்சைச் சுட்டெண்ணை எழுதுதல் ஆகியவற்றுக்காகவும், பரீட்சை நடைபெறும் நேரத்தில் அந்தந்த பகுதிகளுக்கிடையில் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் உபயோகிக்கப்படும்.

- அதற்கமைய, பரீட்சைக்குரிய 04 பகுதிகளையும் நிறைவு செய்ய எடுக்குமென எதிர்பார்க்கும் காலம் பின்வருமாறு.

| பகுதி | ஆரம்பிக்க முன்னர் காலம் நிமிடங்கள் | ஒலிநாடாவின் காலம் நிமிடங்கள் | ஒலிக்கப்படும் தடவைகள் | ஒலிபரப்பாகி முடிந்த பின் காலம் நிமிடங்கள் | ஒரு பகுதிக்கான காலம் நிமிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 03 | 04 | ஒரு சொல் இருதடவைகள் வீதம் | 03 | 10 |
| 02 | 03 | 04 | ஒரு சொல் / இலக்கம் இருதடவைகள் வீதம் | 03 | 10 |
| 03 | 03 | 06 | ஒரு வாக்கியம் இருதடவைகள் வீதம் | 03 | 12 |
| 04 | 03 | 06 | முழுமையான கலந்துரையாடல் அல்லது உரை (இரு தடவை) முதற் தடவை | 03 | 21 |
| | | 06 | முழுமையான கலந்துரையாடல் அல்லது உரை இரண்டாம் தடவை | 03 | |
| | | | | **மொத்தக் காலம் - நிமிடங்கள்** | **53** |

- அந்தந்த பகுதிகளுக்குரிய வினாக்கள், முறையான ஓட்டத்தில் ஒலிக்கப்பட்ட ஒலிநாடாவிற்கமைய முன்வைக்கப்பட்டிருக்கும்.

- ஒரு சொல் அல்லது இரண்டு சொற்கள் விடையாக அமையுமாறு இடைவெளிகளை நிரப்புதல், (√), (×) அடையாளங்களை இடுதல், இலக்கங்கள் இடுதல், சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுதல் போன்ற செவிமடுத்தல் திறனைப் பரீட்சிக்கத்தக்க முறைகளுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளின் கீழ் தயாரிக்கப்பட்ட வினாத்தாளாக அமையும்.

## விடைத்தாள் மதிப்பீடும், புள்ளிகள் வழங்கலும்

- முழு வினாத்தாளுக்குமான மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

- ஒரு வினாவிற்கு 2.5 புள்ளிகள் வழங்கப்படும்.

- எழுத்துப் பிழைகளுடன் கூடிய விடைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

- விடை எழுதும் போது இலக்கணம் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். இலக்கண வழுக்கள் இருப்பின் பிழையான விடையாகக் கருதப்படும்.

- தெளிவற்ற விடைகள் பிழையான விடையாகக் கருதப்படும்.

- விடைகளை முன்வைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள முறைகள், உதாரணமாக சரியாயின் √ அடையாளத்தை இடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் குறித்த அடையாளத்தை இடாமல் வேறு முறையில் வழங்கப்பட்ட விடை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

## செவிமடுத்தல் திறன் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சையின்போது கையாளக்கூடிய உத்திகள்

- வினாத்தாள் வழங்கப்பட்ட பின், பகுதி 01 தொடக்கம் பகுதி 04 வரை வரிசைக் கிரமமாக ஒலிநாடாக்கள் ஒலிக்கச் செய்யப்படும்.

- ஒலிநாடாவொன்று இரு தடவைகள் மட்டுமே ஒலிக்கச் செய்யப்படும். ஒலிநாடாவொன்றை ஒலிக்கச் செய்ய முன் வழங்கப்படுகின்ற 03 நிமிடங்களில், அச் சந்தர்ப்பத்திற்குரிய வினாக்களை உடைய பகுதியை மட்டும் நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளவேண்டும்.

- சிறந்த உள ஒருநிலைப்பாட்டுடன், தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும், அச்சந்தர்ப்பத்தில் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களையும் தெளிவாக விளங்கி கிரகித்துக் கொள்ளவேண்டும்.

- இயலுமானவரை ஒலிநாடா ஒலிக்கும் ஒழுங்கிற்கு ஏற்ப வினாக்கள் தயாரிக்கப்பட்டிருக்கும் என்பதால், ஒலிநாடாவை செவிமடுத்துக் கொண்டே முறையாக வினாப்பத்திரத்தின் உரிய பகுதியை நோட்டமிட்டு பரீட்சித்தல் வேண்டும். அவ்வாறு செய்வதால் உரிய விடைகளை இனங்கண்டுகொள்ள இலகுவாக இருக்கும்.

- பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் மிகவும் நிதானமாக இருந்து, தமது காது, கண் மற்றும் மனதை ஒருநிலைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## 02. பேச்சு மற்றும் வாசிப்புத் திறன் பரீட்சை

சிங்கள மொழியில்/ தமிழ் மொழியில் ஏதேனும் கருத்தொன்றைத் தெரிவிக்கும் / வெளிப்படுத்தும் திறனை பரீட்சிப்பதற்காக இப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. இங்கு சிக்கலற்றவாறும் தெளிவாகவும் கருத்துக்களை தெரிவித்தல், சரியானதும் தெளிவானதுமான உச்சரிப்பு, பொருத்தமான சொற்பிரயோகம் என்பன மீது கவனம் செலுத்தப்படும். அதேபோல் நிறுத்தற் குறிகள் மீது கவனம் செலுத்தி, உரிய நேரத்திற்குள் தெளிவாகவும், சப்தமாகவும் வாசித்தல் வேண்டும்.

02 ஆம் வகுதிக்குரிய உத்தியோகத்தர்களின் பதவி மற்றும் பணிகளின் தன்மைக்கு ஏற்ப பரீட்சைக்குரிய விடயப்பரப்புகளும் தலைப்புகளும் தயார் செய்யப்படும்.

## பரீட்சையின் மாதிரி

பேச்சுத்திறன் பரீட்சை 4 படிமுறைகளைக்/ கட்டங்களைக் கொண்டது.

❖ **பிரவேசம் (1 நிமிடம்)** - புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

பரீட்சை ஆரம்பத்தில் பரீட்சார்த்திக்கு மன ஒருநிலைப்பாட்டை ஏற்படுத்துவதையும் பரீட்சை மீதான அச்ச உணர்வை குறைப்பதையும் நோக்காகக் கொண்டு சிறியதொரு நட்பு ரீதியான பரஸ்பர உரையாடலொன்று இடம்பெறும். இதற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. (நேரம் - 1 நிமிடம் மட்டும்)

❖ **பகுதி 1 (4 நிமிடங்கள்) – 25 புள்ளிகள்**

பரீட்சகர் பரீட்சார்த்திக்கு அனுபவமான விடயங்கள் குறித்து வினவுவார். (10 வினாக்களை உள்ளடக்கியது)

உதாரணம்: வசிப்பிடம், தொழில், அலுவலகம், ஒப்படைக்கப்பட்ட பணிகள்

(இலகுவான வாக்கியங்கள் மற்றும் குறுகிய விடைகள் மூலம் விடையளித்தல்)

❖ **பகுதி 2 (3 நிமிடங்கள்) - 25 புள்ளிகள்**

பரீட்சார்த்தி படம் ஒன்றைத் தெரிவு செய்தல் வேண்டும். அப்படத்தை அவதானித்து தயாராவதற்கு 01 நிமிடம் வழங்கப்படும் என்பதுடன், 02 நிமிடங்களில் அப் படம் குறித்த விடயங்களை முன்வைத்தல் வேண்டும்.

❖ **பகுதி 3 (4 நிமிடங்கள்) - 25 புள்ளிகள்**

கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்ப பரீட்சகருக்கும் பரீட்சார்த்திக்கும் இடையில் உரையாடலொன்று இடம்பெறும்.
(உரையாடல் தலைப்பு வழங்கப்படும்)

❖ **பகுதி 4 (3 நிமிடங்கள்) – 25 புள்ளிகள்**

கொடுக்கப்பட்ட பந்தியொன்றை உரத்து வாசிப்பதற்கு பரீட்சார்த்திக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அப் பந்தியை வாசிப்பதற்கு தயாராவதற்கு 1 நிமிடம் வழங்கப்படும் என்பதுடன், சப்தமிட்டு வாசிப்பதற்கு 2 நிமிடங்கள் வழங்கப்படும்.

- பரீட்சைக் காலம் 15 நிமிடங்கள்.

- முழுப் பரீட்சைக்குமான புள்ளிகள் 100 ஆகும்.

## பரீட்சிக்கும் முறையும், புள்ளி வழங்கலும்

பேச்சுத் திறன் மற்றும் வாசிப்புத் திறன் மதிப்பீட்டுப் பரீட்சையின் போது 05 அளவுகோல்களின் அடிப்படையில் பரீட்சார்த்தியின் திறமை பரீட்சிக்கப்படும்.

1. பேச்சுச்சரளமும் பொருத்தப்பாடும்
2. சொற்களஞ்சியம்
3. இலக்கணம்
4. உச்சரிப்பு
5. நேர முகாமைத்துவம்

### 1. பேச்சுச்சரளமும் பொருத்தப்பாடும்

ஏதேனும் தலைப்பொன்றின் கீழ் உரையாடும் போது/ பேசும் போது சரளமாக விடயங்களை முன்வைக்கும் முறையும், அவ் விடயங்களை தொடர்புபடுத்தி கட்டியெழுப்பும் முறையும் பரீட்சிக்கப்படும்.

### 2. சொற்களஞ்சியம்

பரீட்சார்த்தியின் அறிவுத் திறனுக்கேற்ப பிரயோகிக்கும் சொற்கள் மற்றும் விடயங்களை முன்வைக்கும் போது பயன்படுத்தப்படும் சொற்கள், அச் சொற்களின் பொருத்தப்பாடு, பொருத்தமற்ற தன்மை முதலான விடயங்கள் குறித்து பரீட்சிக்கப்படும். ஆங்கில வார்த்தைகளைத் தவிர்த்து, உரிய மொழியிலேயே விடயங்களை முன்வைத்தல்.

### 3. இலக்கணம்

இங்கு குறித்த மொழியில் காணப்படுகின்ற இலக்கண விதிகளைப் பின்பற்றியவாறு பேசப்படுகின்றதா? என்பது பற்றி கவனம் செலுத்தப்படும்.

### 4. உச்சரிப்பு

சரியாகவும் தெளிவாகவும் சொற்கள் உச்சரிக்கப்படுகின்றனவா? என்பது பற்றி இங்கு கவனம் செலுத்தப்படும்.

## 5. நேர முகாமைத்துவம்

உரிய நேரத்திற்குள் வெற்றிகரமாக விடயங்களை முன்வைத்தல் அல்லது வாசித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்.

மேற்படி 5 விடயங்கள் மீதும் கவனம் செலுத்தி புள்ளிகளைத் தீர்மானிக்கும் போது பின்வருமாறு செயற்படுதல் வேண்டும்.

பரீட்சையில் ஒருபகுதிக்கு 25 புள்ளிகள் வழங்குவதாயின், அப் புள்ளிகள் உரிய 5 அளவுகோல்களின் அடிப்படையில் பின்வருமாறு வழங்கப்படும்.

| | **பேச்சுச்சரளமும் பொருத்தப்பாடும் (05)** | **சொற்களஞ்சியம் (05)** | **இலக்கணம் (05)** | **உச்சரிப்பு (05)** | **நேர முகாமைத்துவம்** (05) |
|---|---|---|---|---|---|
| மிக நன்று | 5 | 5 | 5 | 5 | 5 |
| நன்று | 4 | 4 | 4 | 4 | 4 |
| ஓரளவு நன்று | 3 | 3 | 3 | 3 | 3 |
| பலவீனம் | 2 | 2 | 2 | 2 | 2 |
| மிகவும் பலவீனம் | 1 | 1 | 1 | 1 | 1 |
| எதுவுமில்லை | 0 | 0 | 0 | 0 | 0 |